**தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு**

**பிறப்பிப்பவர்: திரு.க.கண்ணன், M.A., B.Ed.,**

**ந.க.எண்.2442/2025/எம்சிஎப்1, நாள். 17.04.2026**

| | |
|---|---|
| **பொருள்** | மனைப்பிரிவு – தஞ்சாவூர் மாநகராட்சி – சர்வே வார்டு எண்.06, பிளாக் எண். 23, நகரளவு எண்கள். 1301/2, 12150.00 ச.மீ இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக. |
| **பார்வை** | 1. தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு. இணை இயக்குநர் / துணை இயக்குநர உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். TPHI2968 (41248)/2025/TD-3/TCP/ நாள். 14.02.2025.<br>2. தங்களின் தானப்பத்திர ஆவண எண்683/2025 நாள். 03.02.2025<br>3. மாமன்றத் தீர்மான எண். 384 நாள் 28.01.2026.<br>4. இவ்வலுவலக் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 30.01.2026<br>5. தங்களின் கடிதம் நாள் 17.04.2026 |

********

**உத்தரவு:**

தஞ்சாவூர் மாநகரம், சர்வே வார்டு எண்.06, பிளாக் எண். 23, நகரளவு எண்கள். 1301/2, 12150.00 ச.மீ பரப்பளவு இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்ய தங்களால் அனுமதி அளிக்க கோரப்பட்டதற்கிணங்க பார்வை (1)ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடுக்குகள், பொது உபயோகம் 501.25 சதுர அடி பரப்பளவு உள்ள இடம் மின்சார வாரியத்திற்கு உண்டான 478.50 சதுர அடி பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 9385.00 சதுர அடி பரப்பளவு உள்ள இடம் ஆகியவற்றை பார்வை (2)ல் கண்டுள்ள தானப்பத்திரம் வாயிலாக தங்களால் இம்மாநகராட்சி ஆணையர் பெயரில் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை (3)ல் இம்மாமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் பராமரிப்பிற்கான முன் வைப்புத் தொகை ரூ. 3,00,000/- (ரசீது எண்.107/05/1/25-26/0009557 நாள்: 10.09.2025 தங்களால் இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி பார்வை 5ல் கண்டுள்ள தங்களின் கடிதத்தில் மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ரூ.21,270 (ரசீது எண் 107/05/1/25-26/0010866) நாள் 29.09.2025ல் இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்ட ரசீது இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (1)ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி மற்றும் நிபந்தனைகளின் படியும், பார்வை (3)ல் கண்டுள்ள மாமன்ற ஒப்புதல் படியும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது.

17/4/26

ஆணையாளர்,

தஞ்சாவூர் மாநகராட்சி.

17/4/26

**இணைப்பு :** உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம்
மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

**பெறுநர்:**

திரு.P.குழந்தை வேல்,
திருமதி.R.மாலதி ,
திருமதி.K. பஞ்சமி,
திருமதி.R.தேவி
31/432 பழைய மாரியம்மன் கோவில் ரோடு,
கீழவாசல், தஞ்சாவூர்.

**நகல் :**

1. மாநகராட்சி உதவிப் பொறியாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (சாலை பதிவேட்டில் பதிவு செய்ய ஏதுவாக)
2. நகரசார் ஆய்வாளர், தஞ்சாவூர் மாநகராட்சி. (நகரளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்ய ஏதுவாக)
3. உதவி வருவாய் அலுவலர், தஞ்சாவூர் மாநகராட்சி (காலிமனை வரி தொடர்ந்து வசூல் செய்திட ஏதுவாக)